

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை கணினி மூலம் பதிவேற்றம் செய்யும் பணியை அவர் ஆய்வு மேற்கொண்டார். உடன் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம்,ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி ஆகியோர் உள்ளனர்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை!

## ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, ஜுலை 25-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பத்தாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்கள் நிதி ஆயோக் மூலம் பெற்ற ஆலோசனைகள் எவையும் நாட்டின் சாதாரண எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு பயனளிக்கவில்லை.



தற்போது ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள 202425 வரவு செலவு அறிக்கையில் உற்பத்தி, வேலை வாய்ப்புகள், சமூக நீதி, நகர்ப்புற மேம்பாடு, எரிசக்தி பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் உள்ளிட்ட 9 கூறுகளில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், ஏழைகள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் கடந்த ஆறு முறை நிதியமைச்சர் தாக்கல் செய்த வரவு செலவு அறிக்கையில் இடம் பெற்றிருந்தது தான், ஆனால் செயல்பட்டிற்கு வந்ததா என்பதுதான் கேள்விக் குறி.

இந்திய பொருளாதாரம் 6.5 முதல் 7 விழுக்காடு வளர்ச்சி அடையும் என்றும், பண வீக்க விகிதம் 4.5 விழுக்காடு அளவு குறையுமென்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் நடைமுறையில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படவில்லை.

உணவு பணவீக்கம் 7.5 விழுக்காடாக அதிகரித்ததால் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன என்பதுதான் உண்மை நிலை ஆகும்.

வேளாண்மை துறைக்கு 1.52 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து ஓராண்டு காலம் போராடிய விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிதிநிலை அறிக்கையில் ஏற்கப்படவில்லை என்பது ஏமாற்றம் தருகிறது.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் ஒன்றிய அரசின் பாரா முகத்தாலும், ஜி.எஸ்.டி வரி விதிப்பு முறையாலும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன. இதனால் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்புக்கு தள்ளப்பட்டனர். உடனடியாக இவற்றிலிருந்து மீள்வதற்கு நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்த்த அறிவிப்புகள் இல்லை.

ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தருவோம் என்று மோடி அரசு தந்த வாக்குறுதிகள் காற்றிலே பறந்தன. இந்நிலையில், தற்போது ரூபாய் 2 லட்சம் கோடி செலவில் 4.1 கோடி இளைஞர்களுக்கு ஐந்தாண்டுகளில் வேலை வாய்ப்பு திறன் பயிற்சி மட்டும் அளிக்கப்படும் என்று கூறியிருப்பதும், 500 முன்னணி நிறுவனங்களில் ஒரு கோடி இளைஞர்களுக்கு இன்டர்ன்ஷிப் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் படித்த இளைஞர்களுக்கு ஏமாற்றத்தையே தருகிறது.

அசாம், உத்தரகாண்ட், சிக்கிம், இமாசலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் வெள்ள பாதிப்புக்கு சிறப்பு நிதி ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

அதைப்போல பீகார், ஆந்திரா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களுக்கு சிறப்பு திட்டங்களை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் வைத்த கோரிக்கைகளை ஒன்றிய நிதியமைச்சர் புறந்தள்ளி இருக்கிறார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு இல்லை. கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் புதிய ரயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை.

பண மதிப்பு இழப்பு, ஜி.எஸ்.டி, கொரோனா தாக்கம், மின் கட்டண உயர்வு உள்ளிட்டவற்றால் அடுத்தடுத்து நெருக்கடிகளை சந்தித்து வரும் கோவை மாவட்ட தொழில் துறை வளர்ச்சிக்கு திட்டங்கள் எதுவும் இல்லாததும் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

இவ்வாறு வைகோ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள பா.ஜ.க. தயாரித்த பட்ஜெட்!

## இ.கம்யூ - இரா.முத்தரசன் குற்றச்சாட்டு!

சென்னை, ஜுலை 25 -

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை வருமாறு:-

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள் விவசாயிகள் ஆகியோரை மையப்படுத்தியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது என்று சொல்லப்பட்டாலும், இந்தத் துறைகளை பயன்படுத்தி கார்ப்பரேட்டுகளுக்கு அதிக பயன்கள் தரப்பட்டுள்ளன.



உயர் விளைச்சலுக்கான நூற்றுஒன்பது புதிய வகை தானியங்கள். எண்ணெய் வித்துக்கள் உருவாக்கப்படுவதாக சொல்லிக் கொண்டே, இயற்கை விவசாயத்தை மேம்படுத்தப் போவதாக கூறுவது முரண்பாடு நிறைந்ததாக உள்ளது.

ஏற்கனவே விவசாய த்தை கார்ப்பரேட் மயமாக்குவதற்கு 3 வேளாண் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இப்போது கிளஸ்டர் என்ற பெயரில் மீண்டும் அதே முயற்சி எடுக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு குறித்து நிதி நிலை அறிக்கையில் நிறைய பேசப்படுகிறது. ஆனால் புதிதாக சேர்க்கப்படும் தொழிலாளர்களுக்கு முதல் மாதம் சம்பளத்தை அரசாங்கமே வழங்கும் என்றும், அவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி தொகை பங்களிப்பை அரசே செலுத்தும் என்றும் சொல்வது, தொழிலாளர்களுக்கு அல்ல, முதலாளிகளுக்குத்தான் அதிக நன்மையை ஏற்படுத்தும். மேலும் இந்த வேலை வாய்ப்புகளும் நிரந்தரமானதாக அமைவதற்கான சாத்திய கூறுகளை பற்றி நிதிநிலை அறிக்கை ஏதும் பேசவில்லை.

மைனாரிட்டி அரசாங்கத்தை தாங்கிப் பிடிக்கிற ஐக்கிய ஜனதா தளத்தையும், தெலுங்கு தேசம் கட்சியையும் திருப்திபடுத்துவதற்கு அரசு நிதி அள்ளிக் கொட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆந்திர பிரதேசத்துக்கு தனித் தகுதி அளிக்க மறுத்த பா.ஜ.க. அரசு இப்போது அவர்கள் கேட்ட நிதியை வழங்கி இருக்கிறது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கையாலும், புதிய ஜிஎஸ்டி வரி விதிப்பாலும் தொய்வடைந்து சுருண்டு வீழ்ந்துவிட்ட லட்சக்கணக்கான சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஆதாரத்தை உருவாக்கவும், மேம்பாடடையச் செய்யவும் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. கார்ப்பரேட்டுகளின் வலுமிக்க தாக்குதலில் இருந்து இந்த சிறு குறு நடுத்தர தொழில்களை காப்பாற்றுவதற்கு பதிலாக, உலக அளவில் போட்டிக்கு இவற்றை தயார் செய்யப் போவதாக கூறுவது வெற்று உரை ஆகும்.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 10 லட்சம் கோடி ரூபாய்களுக்கு வீடு கட்ட போவதாக படாடோபமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 2.2 லட்சம் கோடி ரூபாய் தான். மீதி 7.8 லட்சம் கோடி ரூபாய் மாநில அரசுகளின் தலையில் விழுகிறது.

பீகார், அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் நாட்டுக்கு வெளியில் இருந்து வரும் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதாக இப்போதுதான் நிர்மலா சீதாராமன் கண்டுபிடித்திருக்கிறார். மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும் மறு கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் மறுவாழ்வு முயற்சிகளுக்கும் அதிக நிதியை ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. ஆனால் தமிழ்நாடு உள்பட வெள்ளத்தால் பாதிக்கப்படும் தென்மாநிலங்களை பற்றி மூச்சு கூட விடவில்லை.

சுற்றுலாவை மேம்படுத்துகிறோம் என்ற முறையில் விஷ்ணுபோதி, மகாபோதி, காசி விஸ்வநாதர் கோவில் உள்ளிட்ட இந்து, புத்த, ஜைன கோவில்களுக்கு புனித யாத்திரை திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல அண்மையில் பா.ஜ.க வெற்றி பெற்றுள்ள ஒடிசா மாநிலத்திற்கு சுற்றுலாத் திட்டங்கள் தரப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் எழில் கொஞ்சும் கடற்கரைகளையும், மேற்கு மலைத் தொடர்ச்சியையும், கோடை வாசஸ்தலங்களையும், வேறெந்த மாநிலங்களையும் விட அதிக கோவில்களையும், பாரம்பரிய சின்னங்களையும் கொண்ட தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாட்டுக்கு எந்தத் திட்டமும் இல்லை. இதில் மட்டும் அல்லாமல், அனைத்து வகைகளிலும்தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது, பெரும் கண்டனத்திற்குரியதாகும்.

வருமான வரி கட்டுவதற்கு ஏற்கனவே இருந்த முறைமையை மாற்றி புதிய முறைமையை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. பழைய முறைமையில் இருந்த பல சலுகைகள் பறிபோவதாகக் கருதிய ஊதிய பிரிவினர் புதிய முறைமைக்கு மாற தயக்கம் காட்டி வந்தனர். அவர்களை புதிய முறைமைக்கு இழுப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை முயல்கிறது.

ஜி.டி.பி. கணக்கில் பார்க்கும் போது உலகத்தில் ஐந்தாவது இடத்தில் இந்தியா இருந்தாலும், தனிநபர் ஜிடிபி என்று பார்க்கும் போது 126வது இடத்தில் இருக்கிறது. உலக அளவில் அதிக ஏழைகள் வாழும் நாடாகவும், உலகத்தின் கடும் பட்டினியில் வாடும் 15 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா இருக்கிறது. வெறும் பத்து சதவீத மக்கள் மட்டுமே மேலதிக சொத்துக்களையும், உயர் வருவாயையும் பெறும் வகையில் பாஜக அரசின் பொருளாதார கொள்கை உள்ளது.

ஒரு புறம் செல்வக் குவிப்பு உச்சத்துக்கு ஏறுகையில், மறுபக்கத்தில் 50 கோடிக்கு மேற்பட்ட மக்கள் அதீத வறுமையில் உழல்கிறார்கள். இதை ஓரளவுக்காவது மாற்றுவதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தனது அரசு நிலைப்பதற்காக பீஹார், ஆந்திரா மாநிலங்களின் ஆளுங்கட்சிகளை குளிர வைக்கவும், வெகு விரைவில் சட்டமன்றத் தேர்தல்கள் வர இருக்கும் மாநிலங்களில் தமது கட்சிக்கு வாக்குகளை ஈர்க்கவும், வழக்கம் போலவே கார்ப்பரேட்டுகளுக்கும் பெரு வணிக குழுக்களுக்கும் உதவி செய்யவும் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை இது.

இவ்வாறு இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் மாநகராட்சி பகுதிகளில் 5வது நாளாக சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. 9, மற்றும் 10வது கோட்டத்தின் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கினார். உடன் மேயர் ஆ.ராமச்சந்திரன், அவைத் தலைவர் கே.ஆர்.முருகன், பகுதி செயலாளர்கள் கேபிள்.ராஜா, கே.டி.ஆர்.தனசேகரன், கோட்டச்செயலாளர்கள் லோகு, மணிவண்ணன், மாமன்ற உறுப்பினர் தெய்வலிங்கம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# அவதூறு அண்ணாமலையே அடக்கு நாவை!

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தமிழ்நாடு அரசுக்கு எதிராக தினம் தினம் ஏதாவது அவதூறுகளையும் பொய்களையும் கட்டவிழ்த்து விடுவதையே கட்டாயத் தொழிலாக செய்து வருகிறார். வரம்பற்ற வாய்சவடால் வித்தகராக திகழும் அண்ணாமலை தான் படித்த படிப்புக்கு ஏற்ப அவரது செயல்பாடு இல்லை என்பது கண்டிக்கத் தக்கதே.

நிதி ஆயோக் அறிக்கையின் படி தமிழகம் பல துறைகளில் மற்ற மாநிலங்களை விட பின்தங்கி உள்ளதாம். பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையாம், வேலை வாய்ப்பின்மை அதிகரித்து விட்டதாம், சுத்தமான தண்ணீர் இல்லையாம், சுகாதாரம் இல்லையாம் அப்பப்பா அண்டப்புளுகன் ஆகாசப்புளுகன் என்றெல்லாம் கூறுவார்களே; அந்தப் புளுகன்கள் அண்ணாமலை போன்றவர்கள் தானோ!

ஜுலை 18ம் தேதி 'தி இந்து' ஆங்கிலப் பத்திரிகை என்ன எழுதியுள்ளது? உயர்கல்வி மாணவர் சேர்க்கையில், பள்ளிகளில் அடிப்படை வசதியில், மக்கள் நலம், குறைந்த செலவில் மாசில்லா எரிசக்தி, தொழில் வளர்ச்சி, சுற்றுச்சூழல் பராமரிப்பு, அமைதி காத்தல், நிதி நிர்வாகம் ஆகியவற்றில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. மொத்தம் 15 இலக்குகளில் தேசிய வளர்ச்சியை விட தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. வறுமை ஒழிப்பு, மாநிலத்திற்கான நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் நாட்டிலேயே முன்னிலையில் இருக்கிறது. 13 எஸ்.டி.ஜி.களில் நமது மாநிலம் முன்னிலையில் உள்ளது.

வேலையின்மை விகிதம் 7.2%லிருந்து 4.8% தமிழ்நாட்டில் குறைந்துள்ளது. தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் 2% அதிகரித்துள்ளது. கொரோனா ஒழிப்பில், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் மூலம் மாணவ மாணவியர் முன்னேற்றத்தில் முன்னணி, மகளிருக்கான திட்டங்கள் என பல்வேறு துறைகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று 'தி இந்து' ஆங்கிலப் பத்திரிகை தேசிய வளர்ச்சியையும் தமிழ்நாடு வளர்ச்சியையும் ஒப்பிட்டு எழுதியுள்ளது.

இதைப் படித்து பார்த்த அண்ணாமலைக்கு வயிறு பத்திக் கொண்டு எரிய தொடங்கிவிட்டது. ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் கழகம் வெற்றி பெற்று பா.ஜ.க. பல தொகுதிகளில் டெபாசிட் இழந்ததும் ரூ.200 கோடிக்கு மேல் செலவிட்டும் கோவையில் லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததும், சமீபத்திய விக்கிரவாண்டி வெற்றியாலும் அண்ணாமலைக்கு தூக்கமும் வரவில்லை துக்கமும் தீரவில்லை என்ற நிலையில் 'தி இந்து' பத்திரிகை தமிழ்நாட்டை பாராட்டி எழுதிய செய்தி அறிந்து நெருப்பில் கிடந்த புழுவாய் அண்ணாமலை துடித்துள்ளார்.

அவரோ பொய் சொல்வதில் வித்தகர் ஆயிற்றே அவிழ்த்து விட்டுள்ளார் தமிழ்நாடு எல்லாவற்றிலும் பின்தங்கியுள்ளது என்ற பொய் மூட்டையை! நாரில் கயிறு திரிக்கலாம் மணலில் திரிக்க முடியுமா அண்ணாமலையே!

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



உத்தமபுத்திரரே! அப்பழுக்கற்ற அரசியல்வாதி என்று அடிக்கடி கூறிக் கொள்பவரே! நீங்கள் பா.ஜ.க தமிழ்நாடு தலைவராகி மூன்று ஆண்டுகளில் 10,000 கோடி சம்பாதித்து விட்டீர்கள் என்று உங்கள் கட்சியில் இருந்து கொண்டு உங்களுக்கு புகழ்பாடிக் கொண்டிருந்த தம்பி திருச்சி சூர்யா கூறியுள்ளாரே? உங்களுக்கு இந்த பணம் எப்படியப்பா வந்தது?

உழைத்து சம்பாதிக்கிறீர்களா? காவல்துறை பணியிலிருந்து ராஜினாமா செய்து விட்டு தலைவரான 3 வருடத்தில் எப்படி இவ்வளவு பணம் வந்தது? ஆண்டாண்டு காலமாக அரசியலில் இருப்பவர் கூட இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை பெரிய தொகையை கொள்ளையடித்ததாக கேள்விப்பட்டதில்லையே! இப்படி கொள்ளையடித்து கொழுத்து தின்பதற்குத் தான் ராஜினாமா செய்து விட்டு வந்தீர்களோ?

திருச்சி சூர்யா அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாக கூறியுள்ளார். உங்கள் மனைவி அகிலா பெயரில் லண்டனில் வீடு வாங்கியுள்ளீராமே! நான் கேள்விப்பட்ட வரை நடுத்தர குடும்பத்தில் பிறந்த உங்களுக்கு அயல்நாடுகளில் எப்படி இவ்வளவு சொத்து வாங்க முடிந்தது? உங்கள் மைத்துனர் பெயரில் கொங்கு மண்டலத்தில் 200 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளீராமே! அதுவும் பலநூறு கோடி ரூபாய் இதற்கு ஆதாரம் உள்ளது என்று கூறியுள்ளார். இதற்கெல்லாம் நீங்கள் எந்த பதிலும் தரவில்லை. அப்படியே மெளனமாக இருக்கிறீர்களே! அப்படியானால் அத்தனையும் உண்மை என்றுதானே அர்த்தம்.

ஏழைப் பங்காளன் என்று கூறி கொள்ளும் நீங்கள் வசிக்கும் வீட்டின் வாடகை எத்தனை லட்சம், உடுத்தும் உடை, அணியும் செருப்பு உட்பட ஒவ்வொன்றும் எவ்வளவு என்று பட்டியலிடுவதற்கு உங்கள் பதில் என்ன? கேட்டால் நண்பர்கள் கொடுக்கிறார்கள் என்கிறீர்கள். அந்த நண்பர்கள் ஏன் கொடுக்கிறார்கள்? அதற்குப் பெயர் என்ன - நாகரிக லஞ்சமா? அல்லது டிஜிட்டல் லஞ்சமா? கூறுவீர்களா?

நான் கன்னடத்துக்காரன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன் என்று சொன்னவர் தான் நீங்கள். அப்படி சொன்னால்தான் கர்நாடகத்தில் அதிகாரியாக காலம் தள்ளியிருக்க முடியும்.

எப்படி தந்தை பெரியார் காமராஜர் அவர்களை பச்சை தமிழன் என்று சொன்னாரோ அப்படியே நாங்களும் உங்களை பச்சைத்தமிழன் என்று தான் நினைக்கிறோம். அப்படி உண்மையிலேயே உங்களுக்கு தமிழ் உணர்வு இருக்குமானால் காவேரி ஒழுங்காற்று ஆணையம் தமிழகத்திற்கு தர வேண்டிய தண்ணீரை கர்நாடகம் உடனே தர வேண்டும் என்பதை ஏற்க மறுக்கும் கர்நாடக அரசிடம் பேசி காவிரி தண்ணீரை பெற்றுத் தாருங்களேன் அல்லது உங்களது ஒன்றிய அரசிடம் பேசி தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் எனக் கூறப்படும் டெல்டா சீமை தண்ணீரின்றி குறுவை சாகுபடி செய்யாமலிருக்கிறது என்று கூறி தமிழ்நாட்டுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தாருங்களேன்.

கர்நாடகா மாநிலத்தின் அணைகள் நிரம்பி உடைந்தால் கர்நாடகம் மூழ்கிவிடும் என்ற நிலை வரும்போது தான் ஒவ்வொரு முறையும் தன்னை காப்பாற்றிக் கொள்ள உபரி நீரை கர்நாடகா தமிழகத்திற்கு திறந்து விடுகிறது. ஒரு முறைகூட உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி ஆணையம் கூறியுள்ளபடி கர்நாடகம் நடந்து கொள்ளவில்லை. இப்போது துணிச்சலுடன் நான் தமிழன், எங்கள் உரிமை காவேரி நீர் அதனை திறந்து விடுங்கள் என்று கூறுங்களேன் அண்ணாமலையே!

இதையெல்லாம் செய்வதை விட்டுவிட்டு தமிழக அரசு மீது பாய்கிறீர்களே ஏன்? மெட்ரோ ரயிலுக்கு நிதி ஒதுக்குங்கள் என்று தமிழக முதல்வர் பிரதமர் மோடியிடம் பலமுறை கேட்டு விட்டார்? தந்தீர்களா? ஆனால் மும்பையிலிருந்து குஜராத்திற்கு அகமதாபாத் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 1.10 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்துள்ளீர்களே? அது எப்படி? இதுதான் குஜராத் பாசம்! அப்படித்தானே!

வேலைவாய்ப்பைப் பற்றி பேசுகிறீர்களே! அதுவும் நீங்கள் எந்த முகத்தோடு பேசுகிறீர்கள் வருடத்திற்கு 2 கோடி பேருக்கு வேலை வழங்கப்படும் என்றது பிரதமர் மோடி தானே! 10 வருடத்தில் 20 கோடி பேருக்கு வேலை வழங்கியிருக்க வேண்டுமே! இதுவரை எத்தனை கோடி பேருக்கு வேலை தந்துள்ளீர்கள் பட்டியலோ அல்லது வெள்ளை அறிக்கையோ உங்களால் வெளியிட முடியுமா? கேட்டால் நாங்கள் ஆட்சிக்கு வரமாட்டோம் என்று எண்ணி சும்மா ஜூம்லா (பொய்) விட்டோம் என்று அமித்ஷாவும், நிதின் கட்கரியும் கூறினார்களே! அதுதானே உண்மை. அப்படிப்பட்ட நீங்களா வேலையின்மை பற்றி பேசுவது? வேலை கேட்டவர்களை பக்கோடா போட்டு விற்பனைச் செய்யுங்கள் என்கிறார் பிரதமர் மோடி. மற்றொரு பா.ஜ.க எம்.எல்.ஏவோ படிப்பதால் என்ன பயன் பஞ்சர் ஒட்டக் கற்றுக் கொண்டு பிழைத்துக் கொள்ளுங்கள் என்கிறார். அது சரியா?

பிரதமர் மோடி அவர்களோ தனது கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் பல கோடி பேர் வறுமைக்கோட்டிலிருந்து மீண்டு விட்டதாக பெருமை பேசுகிறார். பொய்யரே! உங்கள் பிரதமரின் பொய்யைப் பார்த்தீரா? நாட்டில் 50ஙீ மக்களுக்கு மட்டுமே 3 வேளையும் உணவு கிடைப்பதாக 21 மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வு கூறுகிறது. 44ஙீ மக்களுக்கு 3 வேளை உணவு கிடைக்க வில்லை. ஆனால் தமிழ்நாட்டில் ஏழைகள், நடுத்தரமக்கள், பணக்காரர்கள் என அனைத்து தரப்பு மக்களில் 98ஙீ பேருக்கு 3 வேளை உணவு கிடைப்பதாக ஆய்வு கூறியுள்ளது.

இந்த ஆய்வின் தகவல்படி பிரதமர் மோடியின் மாநிலமான குஜராத் கடைசி இடத்தில் உள்ளது. மேலும் பா.ஜ.க ஆட்சி நடக்கும் உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், மகராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் கடைசி 5 இடத்தில் உள்ளன. உ.பி 41ஙீ ம.பி 39ஙீ மகாராஷ்டிரா 34ஙீ ராஜஸ்தான் 34ஙீ குஜராத் 33ஙீ ஏழைகளுக்கு மட்டுமே 3 வேளை உணவு கிடைக்கிறது.

பட்டியலினத்தவருக்கு தமிழகத்தில் பாதுகாப்பில்லை என்கிறீரே அடப்பார்டா, பா.ஜ.க. பணமுதலை கண்ணீர் வடித்துள்ளது. முதல் முதலில் ஒரு பட்டியலினத்தவர் வரதராஜன் என்பவரை உயர் நீதிமன்ற நீதிபதியாக்கி பிறகு உச்ச நீதிமன்றம் அவர் சென்றதற்கு காரணமே கலைஞர் தான். பழங்குடியினத்தை சேர்ந்த திரௌபதி முர்முவை குடியரசுத் தலைவராக்கி விட்டு புதிய நாடாளுமன்ற திறப்பு விழாவிற்கு அவருக்கு அழைப்பும் விடுக்கவில்லை, அழைப்பிதழிலும் அவர் பெயர் இல்லை. ஆனால் தமிழகத்திலிருந்து மடாதிபதிகளை தனி விமானத்தில் அழைத்துப் போனீர்? அருகிலிருந்த முர்மு அழைக்கப்படாதது, அவர் வந்தால் நாடாளுமன்றம் தீட்டாகி விடும் என்பது தானே காரணம்.

ராமர் கோயில் கும்பாபிஷேகத்திற்கும் முதல் குடிமகள் திரௌபதி முர்மு அழைக்கப்படாதது ஏன்? பா.ஜ.கவை சேர்ந்தவர்தானே! அவர் வந்தால் ராமர் கோயில் தீட்டாயிடும் அப்படிதானே! அவருக்கு முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த ராம்நாத் கோவிந்த் பூரி ஜெகன்நாதர் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படாதது ஏன்? ஒரு ஒன்றிய அமைச்சர் கோயிலுக்குள் செல்கிறார். ராம்நாத் கோவிந்த் வெளியே நிறுத்தப்படுகிறார்.

மணிப்பூர் ஆண்டுக் கணக்கில் பற்றி எரிகிறது. அங்கு பாதிக்கப்படுபவர்கள் குக்கி இன பழங்குடியின பட்டியல் இனத்தவர்கள். அதனால் தானே பிரதமர் மோடி அங்கு இதுநாள் வரை செல்லவில்லை. உங்கள் பா.ஜ.க பட்டியலினத்தவரை முதல் குடிமகளையே இப்படி நடத்துகிறார்கள் என்றால் மற்ற சாதாரண பட்டியல் இனத்தவர்களை நீங்கள் எப்படி நடத்துவீர்கள் என்பதை எழுத வேண்டுமா அண்ணாமலை?

தமிழகத்தில் திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர், சமயபுரம், மதுரை மீனாட்சி போன்ற முக்கிய கோவில்கள் உட்பட எந்த சிறு கோயில்களிலும் தலித்துகள் கோயிலுக்குள் தாராளமாக சென்று வணங்குவதை நீங்கள் மறுக்கிறீர்களா? இது பெரியார் மண் இங்கு பட்டியல் இனத்தவரும் அர்ச்சகராகலாம் என்று சட்டம் கொண்டு வந்தவர் கலைஞர். அர்ச்சகராக்கியவர் தற்போதைய முதல்வர் தளபதியார். எங்கள் ஆட்சி மீதா நீங்கள் பொய்களை கூறி களங்கப்படுத்த முயல்கிறீர்கள்?

எனவே அண்ணாமலையே இனிமேலும் ஆதாரம் இல்லாமல் விபரம் தெரியாமல் பேசாதீர்கள். விக்ரவாண்டி தேர்தலில் ஆளும் கட்சி பணத்தால் வெற்றி பெற்றது என்கிறீர்களே! இடைத்தேர்தலில் ஆளும் கட்சி மட்டுமல்ல எதிர்க்கட்சிகளும் வென்றுள்ளன. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது கழக வேட்பாளர்கள் அண்ணா நகரில் சோ.ம.ராம ச்சந்திரனும், மயிலாடுதுறையில் சத்தியசீலனும் வெற்றி பெற்றுள்ளனர். (21.5.84) ஜெயலலிதா அம்மையார் ஆட்சியில் இருந்தபோது துறைமுகம் தொகுதியில் கழக வேட்பாளர் செல்வராஜ் (25.8.91) மங்களூர் தொகுதியில் வி.சி.க தலைவர் திருமாவளவன் ராஜினாமா செய்ய தி.மு.க வேட்பாளர் அங்கு வெற்றி பெற்றுள்ளார் (13.05.2004)

இதேபோல் கலைஞர் முதல்வராக இருந்தபோது அ.தி.மு.க மதுரை கிழக்கு, மருங்காபுரி இடைத்தேர்தல்களில் வெற்றி பெற்றது. இப்படி எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சியை வீழ்த்தி வெற்றி பெற்ற வரலாறெல்லாம் தெரியாமல் இடைத்தேர்தல் என்றாலே ஆளும் கட்சிதான் வெல்லும் என்று பேசி அண்ணாமலை தன் அறியாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 74 மீனவர்களை கைது செய்ததோடு 8 வீசைப் படகுகள் 4 நாட்டுப் படகுகளை பறிமுதல் செய்துள்ளது இலங்கை அரசு. ஆண்டுக்கணக்கில் நம் மீனவர்கள் 6 பேர் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 500க்கும் மேற்பட்டோர் சிங்கள ராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு இந்திய பிரதமர் மோடி என்ன நடவடிக்கை எடுத்தார்? ஆனால் குஜராத் மீனவர்கள் கைது செய்யப்பட்டவுடன் பாகிஸ்தான் அரசுடன் பேசி அவர்களை இந்தியாவிற்கு அழைத்து வந்தாரே பிரதமர் மோடி அந்த வேகத்தை தமிழக மீனவர்கள் விஷயத்தில் மோடி ஏன் காட்டவில்லை. தமிழக மீனவர்கள் இந்திய மீனவர்கள் இல்லையா? தமிழ்நாடு இந்திய மாநிலம் இல்லையா? இதற்கு ஒரு தமிழனாய் பதில் கூறுங்கள் அண்ணாமலை.

இவை சான்றுக்கு தந்த சில பதில்கள்தான். மீண்டும் மீண்டும் அண்ணாமலை பொய்களை அவிழ்த்து விட்டு கழக அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முயன்றால் அவருக்கு ஆதாரங்களுடன் தக்க பதிலடி தரப்படும்.